# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2017 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டம்

---

*(2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 09 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2017, ஓகத்து மாதம் 11 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 9.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

## 2017 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டம்

[2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 09 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ. ஓ 71/2016

**2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

**1.** இச்சட்டம், 2017 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன், இதன்கீழ் வெவ்வேறு நடைமுறைத் தேதிகள் குறித்துரைக்கப்பட்டாலொழிய, 2017, ஏப்பிறல் 1 ஆந் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்துவிட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

*2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்கச் சட்டத்துக்கான முதலாம் அட்டவணையைத் திருத்துதல்.*

**2.** இரண்டாயிரத்துப் பதினாறாம் ஆண்டின் 22 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறானதும் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படுவதுமான) 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டத்தின் முதலாம் அட்டவணை இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வட்டவணையின் பாகம் I இல் -

(அ) அதன் (iv) ஆம் விடயத்தில், (iv) ஆம் உபவிடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(iv) அதனையொத்த வேறு ஏதேனும் நோக்கத்திற்கு,

அத்துடன் அத்தகைய பொருள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டுக் காலப்பகுதியொன்றுக்குள் அல்லது அத்தகைய கருத்திட்டம் பூர்த்திசெய்யப்பட்ட பின்னர் தொண்ணூறு நாட்களைக் கொண்ட காலப்பகுதியொன்றுக்குள் மீளவும் கப்பலேற்றப்பட விருப்பின்;";

2-PL 005258 - 961 (2017/06)

(ஆ) அதன் (xi) ஆம் விடயத்துக்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன்மூலமும் :-

"(xi) (அ) 2016, மே 2 ஆந் தேதிக்கு முன்னரான ஏதேனும் காலப்பகுதிக்காகவும், 2016, யூலை 11 ஆந் தேதியிலிருந்து தொடங்குகின்றதும், 2016 நவெம்பர் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் முடிவடைகின்றதுமான ஏதேனும் காலப்பகுதிக்காகவும், பெற்றோலியம் மற்றும் பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள்; அல்லது

(ஆ) 2016, மே 2 ஆந் தேதியிலிருந்து தொடங்குகின்றதும் 2016, யூலை 11 ஆந் தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதிக்காகவும், 2016, நவெம்பர் 1 ஆந் தேதியன்று தொடங்குகின்ற காலப்பகுதிக்காகவும், சுங்க நோக்கங்களுக்காக இசைவாக்கப்பட்ட வியாபாரப்பொருள் விவரணம் மற்றும் கோவையிடும் இலக்கங்களின் கீழ் வகுப்பாக்கம் செய்யப்பட்ட உராய்வு நீக்கிகள் தவிர்ந்த பெற்றோலியம் மற்றும் பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள்;";

(இ) அதன் (xviஅ) என்னும் விடயத்தில் "எயர் லங்கா கேற்றறிங் சேவைகள் லிமிட்டெட்," என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்:-

"2017, ஓகத்து 1 ஆந் தேதிக்கு முன்னரான ஏதேனும் காலப்பகுதிக்காக எயர் லங்கா கேட்டரிங் சேர்விசஸ் லிமிட்டெட்";

(ஈ) அதன் (xviii) ஆம் விடயத்தில் ''இறக்குமதி செய்யப்பட்ட அல்லது விற்பனை செய்யப்பட்ட ஏதேனும் பொருள்;'' என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்:-

''2017, ஓகத்து 1 ஆந் தேதிக்கு முன்னர் இறக்குமதி செய்யப்பட்ட அல்லது விற்பனை செய்யப்பட்ட ஏதேனும் பொருள்;'';

(உ) (L) என்னும் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தை உட்புகுத்துவதன்மூலமும்:-

''(LI) இசைவாக்கப்பட்ட வியாபாரப்பொருள் விவரணம் மற்றும் கோவையிடும் இலக்கங்களின் கீழ் இனங்காணப்பட்ட செய்தித்தாள்கள் தவிர்ந்த அச்சிடப்பட்ட புத்தகங்கள், மாதவெளியீடுகள், பருவவிதழ்கள் அல்லது சஞ்சிகைகள் அல்லது ;'';

(2) அவ்வட்டவணையின் பாகம் II இல் -

(அ) அதன் (ii) ஆம் விடயத்துக்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன்மூலமும்:-

''(ii) (அ) 2016, மே 2 ஆந் தேதிக்கு முன்னர் முடிவடைந்த ஏதேனும் காலப்பகுதிக்காகவும், 2016, யுலை 11 ஆந் தேதியிலிருந்து ஆனால் 2017, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற காலப்பகுதிக்காகவும் மின்சாரம் வழங்குதல்;

(ஆ) 2017, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர், 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கை மின்சார சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மின்சார சபையினால் மின்சாரம் வழங்கப்படுதல் தவிர்ந்த மின்சாரத்தைப் பிறப்பாக்கம் செய்தலும் மின்சாரம் வழங்குதலும்;'';

(ஆ) அதன் (vii) ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும்:-

"(vii) (அ) 2011, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னர், கீழ் ஒப்பந்தக்காரர் ஒருவராக அல்லாத நிர்மாண ஒப்பந்தக்காரர் ஒருவரின் சேவை; அல்லது

(ஆ) 2011, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால், 2017, ஓகத்து 1 ஆந் தேதிக்கு முன்னர், நிர்மாண ஒப்பந்தக்காரர் ஒருவரின் அல்லது கீழ் ஒப்பந்தக் காரர் ஒருவரின் சேவை; அல்லது

(இ) 2017, ஓகத்து 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர், நிர்மாணக் கீழ் ஒப்பந்தக்காரர் ஒருவரின் சேவை;

அத்தகைய சேவைகள், ஏதேனும் கட்டிடத்தை, வீதியை, பாலத்தை, நீர்வழங்கலை, வடிகாலை அல்லது கழிவகற்றும் முறைமையை, துறை முகத்தை, விமான நிலையத்தை அல்லது தொலைத் தொடர்பில் அல்லது மின்சாரத்தில் ஆன ஏதேனும் உட்கட்டமைப்புக் கருத்திட்டத்தை நிர்மாணித்தல் தொடர்பிலானவையாக இருக்கும் அளவுவரை;"

(இ) அதன் (xiv) ஆம் விடயத்திற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன்மூலமும்:-

"(xiv) (அ) 2017, ஓகத்து 1 ஆந் தேதிக்கு முன்னர்;

(ஆ) 2017, ஓகத்து 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர், அத்தகைய சேவைகளுக்கான கொடுப்பனவு ஒரு வங்கியினூடாக வெளிநாட்டு நாணயத்தில் பெறப்படுமிடத்து,

தொழிற்படுத்தப்பட்ட உள்நோக்கிவரும் பயணங்கள் தொடர்பில் பிரயாண முகவர் ஒருவரின் சேவைகள்; அத்தகைய முகவர் இலங்கைச் சுற்றுலாப் பயணச் சபையிடம் பதிவுசெய்யப்பட்டிருப்பாராயின்;";

(ஈ) அதன் (xxii) ஆம் விடயத்துக்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன்மூலமும்:-

"(xxii) வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவு செய்யப்படுவதற்காக இலங்கைக்கு வெளியே பயன்படுத்தப்படுவதற்கென இலங்கைக்கு வெளியேயுள்ள எவரேனுமாளுக்கு அல்லது பங்காண்மைக்கு இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே அளிக்கப்பட்ட ஏதேனும் சேவை, அத்தகைய வெளிநாட்டு நாணயம் வங்கியொன்றினூடாக இலங்கைக்கு அனுப்பப்பட்டிருப்பின்;";

(உ) அதன் (xxxiv) ஆம் விடயத்தில் ''ஏதேனும் சங்கங்களினால் வழங்கப்பட்ட சேவைகள்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக "2017, ஒகத்து 1 ஆந் தேதிக்கு முன்னர் ஏதேனும் சங்கத்தினால் வழங்கப்பட்ட சேவைகள்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(ஊ) (xxxviii) ஆம் விடயத்துக்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன்மூலமும்:-

"(xxxviii) 2017, ஒகத்து 1 ஆந் தேதிக்கு முன்னர் முடிவடைந்த ஏதேனும் காலப்பகுதிக்காக, வதிவிட வசதியை வழங்குதல் தொடர்பான நிர்மாணக் கருத்திட்டத்தின் பெறுமதி, பத்து மில்லியன் ஐக்கிய அமெரிக்க நாடுகள் டொலருக்கு அல்லது வேறேதேனும் நாணயத்தில் அதற்குச் சமமானதற்குக்

குறைவாகவிருக்கும் அளவுவரை, அத்தகைய வதிவிட வசதியின் நிர்மாணமாகவும் விற்பனை யாகவும் உள்ள, அசைவற்ற காணியும் அதன் மீதான சீராக்கங்களும் தொடர்பிலான தொழில்;";

(எ) (xxxviii) ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(xxxix) எக்ஸ்டேர்னல் கேட்வே ஒப்பரேட்டர் ஸினால் உள்நாட்டுத் தொழிற்படுத்துநர்களுக்கு வழங்கப்பட்ட சர்வதேசத் தொலைத்தொடர்புச் சேவைகள்.".

செல்லுபடி யாக்குதல்.

**3**. விடயத்துக்கேற்ப, உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி அல்லது சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி, முதன்மைச் சட்டவாக்கத்தின் முறையே 4 ஆம் பிரிவின் அல்லது 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகவுள்ள ஆளொருவரிடமிருந்து 2017, ஏப்பிறல் 1 ஆந் தேதியிலிருந்து தொடங்குகின்றதும், இச்சட்டம் தொடர்பில் சபாநாயகரின் சான்றிதழ் புறக்குறிப்பிடப்படும் தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியின்போது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளைக் கவனத்துட்கொண்டு கணக்கிடப்பட்ட வரியைச் சேகரிக்குமிடத்து, அத்தகைய சேகரிப்பு செல்லுபடியான முறையில் செய்யப்பட்டுள்ளதாகவும் செய்யப்படுகின்றதாகவும் எல்லா நோக்கங்களுக்காகவும் கருதப்படுதல் வேண்டும்:

ஆயின், இப்பிரிவின் மேற்கூறப்பட்ட ஏற்பாடுகள், மேற்கூறப்பட்ட காலப்பகுதியின்போது சேகரிக்கப்பட்ட ஏதேனும் வரி தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தினால் செய்யப்பட்ட ஏதேனும் முடிபை அல்லது கட்டளையை அல்லது ஏதேனும் நீதிமன்றத்தில் முடிவுறா துள்ள ஏதேனும் வழக்கு நடவடிக்கையைப் பாதித்தலாகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**4**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்